செ.வெ.எண்:29 நாள்:19.01.2020

**அரியலூர் மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து முகாமினை மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார்.**

அரியலூர் மாவட்டம், அரியலூர் பேருந்து நிலையத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை சார்பில் முதற்கட்ட போலியோ சொட்டு மருந்து முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் **மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன் அவர்கள்** இன்று (19.01.2020) தொடங்கி வைத்து, குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் தெரிவித்ததாவது:-**

அரியலூர் மாவட்டத்தில் 19.01.2020 அன்று காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை ஒரே தவணையாக 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கும் தீவிர போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில் பிறந்த குழந்தை முதல் 5 வயதிற்குட்பட்ட சுமார் 68,156 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது. இம்முகாம்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார மையங்கள், பள்ளிகள் மற்றும் சத்துணவு கூடங்களில் வழங்கப்பட உள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து வழங்க நகர்புறங்களில் 46 மையங்களும், ஊரகப் பகுதிகளில் 496 மையங்களும் என மொத்தம் 542 மையங்கள் செயல்படஉள்ளன. ஆறு நடமாடும் மருத்துவக் குழு மூலமாகவும், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், மற்றும் முக்கிய பொது இடங்களிலும், மேலும் அண்டை மற்றும் பிற மாவட்டம் மற்றும் மாநிலங்களிருந்து சிமெண்ட் தொழிற்சாலைகள் பணி நிமிர்த்தமாக இடம் பெயர்ந்து வசிப்பவர்களின் குழந்தைகளுக்கும் சிறப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்களில் பொது சுகாதாரத்துறையின் 193 பணியாளர்களுடன் 1061 அங்கன்வாடி பணியாளர்கள், பிற துறை பணியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள் 904 மற்றும் மாணவர்கள் 182 பேர் என மொத்தம் 2,340 பணியாளர்கள் பணியாற்றவுள்ளனர். இப்பணிகளுக்கு 31 பிற அரசு துறை வாகனங்கள் மற்றும் 14 பொது சுகாதாரத்துறை வாகனங்கள் உள்ளிட்ட 45 வாகனங்கள் பயன்படுத்தபட உள்ளன.

இம்முகாமிற்கு தேவையான போலியோ சொட்டு மருந்துகள் பெறப்பட்டு குளிர்சாதன வசதிகளுடன் பாதுகாக்கப்பட்டுள்ளன. அரசால் வழங்கப்படும் போலியோ சொட்டு மருந்து மிகவும் தரமானது, பாதுகாப்பானது என உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்றது.

எனவே, அனைத்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு ஏற்கனவே போலியோ சொட்டு மருந்து கொடுத்திருந்தாலும் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் நாளான **இன்று 19.01.2020** தவறாமல் போலியோ சொட்டு மருந்து அளிக்க வேண்டும் என **மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இம்முகாமில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சீனிவாசன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பொ.சந்திரசேகர், துணைத்தலைவர் திரு.அசோகன், ஒன்றியக்குழு பெருந்தலைவர் செந்தமிழ்செல்வி, துணைத்தலைவர் சரஸ்வதி,துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.ஹேமசந்த் காந்தி, அரியலூர் நகராட்சி ஆணையர் திரு.குமரன், வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.ஜெ.பாலாஜி, வட்டார மருத்துவ அலுவலர்கள் மரு.அனிதா, மரு.நிரஞ்சனா, மரு.சுந்தர்ராஜன், மாவட்ட பயிற்சி குழு மருத்துவ அலுவலர் மரு.சதீஸ்குமார், வட்டாட்சியர் திரு.கதிரவன், மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**